# 23. நத்தார்



இன்று நத்தார் தினம். இயேசு பாலகனின் பிறந்த நாள் ஆகும். இயேசு பாலகன் பெத்லகேமில் உள்ள மாட்டுத் தொழுவம் ஒன்றில் பிறந்தார். வானதூதர்கள், இந்தச் செய்தியை மேய்ப்பர்களுக்கு அறிவித்தார்கள். இடையர்கள் இயேசு பாலகனைப் பார்ப்பதற்கு தொழுவத்துக்குச் சென்றார்கள். அரசர்களும் பாலகன் இயேசுவை வணங்குவதற்குப் பரிசுகள் கொண்டு சென்றார்கள்.

நாங்களும் பாலகன் இயேசுவை பணிந்து கொள்ளுவோம்.